# வீராச்சல ஸ்ரீராமசந்த்ர ஸுப்ரபாதம்



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹ மஹா தேசிகாய நமஹ 🙏
ஸ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நமஹ 🙏
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்
🙏🌺🙏🌺🙏🌺🙏🌺🙏🌺🙏🌺🙏🌺🙏🌺🙏🌺🙏
**ஸ்ரீரங்கம் ஸ்ரீமுஷ்ணம் பெரியாண்டவன் ஸ்ரீ ரங்க ராமானுஜ மஹாதேசிகன்** பூர்வாச்ரமத்தில் அருளிய பல ஸ்தோத்திர படைப்புகளில் சிலவற்றை **ஸ்தோத்ராவளீ**

என்ற தொகுப்பாக வந்தது. அதில் இருந்து **வீராச்சலத்தில்** இருக்கும் சக்கரவர்த்தி திருமகன் **ஸ்ரீராமனுக்கு பாடி அருளிய ஸுப்ரபாதமும்** ஒன்று . இது பலஸ்ருதியுடன் சேர்த்து 30 ஸ்தோத்திரங்கள் கொண்டது. நம் ஆசார்ய வள்ளலின் இப்படைப்பை அர்த்தத்துடன் ஒவ்வொன்றாக சேவித்து அனுக்கிரஹம் பெறுவோம்🙏
இன்றைய தினம் **7வது** ஸ்லோகம் சேவிக்கலாம் 🙏

**<u>ஸ்லோகம்</u>** 7👇

**ராகாநிசாகர த்ரஸ்க்ருதித³க்ஷவக்த்ர**
**பாகாரிஜாதி ப⁴யத³த்³யுமணிப்ரபா⁴வ।**
**நாகாதி³லோக**
**ஜனதாவினதாம்க்⁴ரியுக்³ம**
**வீராத்³ரிராக⁴வ விபோ⁴ தவ ஸுப்ரபாதம் ॥7॥**

**அர்த்தம்** 👇
நல்ல சரத்காலத்தில் தோன்றும் நிலவைத் தோற்க்கும்படி செய்யும் அழகிய திருமுக மண்டலம் உடையவனே, பாகஸனன் என்று சொல்லபடும் இந்திரன் முதலானவர்களும் பயந்து நடுங்கி தம்தம் கடமையை செய்யும்படிச் செய்பவனே, ஸூர்யர்களுடைய பெருமையைக்  கொண்டவனே, ஸ்வர்கலோகத்திலிருக்கின்ற தேவர்களும், பரமபதத்தில் இருக்கின்ற முக்தர்களும் வணங்கும் திருவடிகளைக் கொண்டவனே, **வீராச்சல நாயகனே ராகவா! உனக்கு ஸுப்ரபாதம்.**
🙏🌷🌸🙏🌷🌸🙏🌷🌸🙏🌸🌷🙏🌷🌸🙏
பதிவிறக்கம்
அடியேன் தாஸன் 🙏

சித்ரா அமுதன் 🙏
(Vadodara)